**52 தருமிக்குப் பொற்கிழியளித்த படலம்**

வங்கியசேகர பாண்டியன் சோமசுந்தர கடவுளை அலங்கரிக்க பலவித மான நறுமணமுள்ளமலர்கள் கொண்ட நந்தவனம் ஒன்றை அமைத்தான். இதைத் தவிர சண்பக நந்தவனம்ஒன்றையும் தனியே அமைத்தான். இச்சண்பக மலர்களாலான மாலைகளைச் சூட்டி இறை வனை அலங்கரித்ததால் ஐயனை சண்பக சுந்தரர் என்றும் அரசனை சண்பகபாண்டியன் என்றுஅழைத்தனர்.

இளவேனிற் காலத்தில் பாண்டியன் தன் தேவியுடன் அங்கு சென்று தங்கியிருந்தான் அப்பொழுது நறுமணம் மிகுந்த தென்றல் வீசியது. சண்பகமாறன் மணத்தையும் நுகர்ந்துகாற்றுக்கு மணம் இல்லை, அப்படியிருக்க இந்த மணம் எங்கிருந்து வருகிறது என்று எண்ணி திரும்பிப் பார்க்கையில் தேவியின் கூந்தலிலிருந்து வருவதை உணர்ந்தான்அவனுக்குஅம்மணம் கூந்தலுக்கு இயற்கையா, செயற் கையா என்ற ஐயம் எழுந்தது . பின்னர் அரசன் அரண்மனைக்கு வந்து தனது ஐயத்தைப் போக்குவோருக்கு ஆயிரம் பொற் காசுகளுடைய பொற்கிழ தருவதாகக் கூறி அதனை ஏவலாளிகளிடம் கொடுத்து சங்க மண்டபத்துக்கு வாயிலில் பொன்முடியைக் கட்டச் சொன்னான். பல புலவர்களும் தனித்தனியே ஆராய்ந்தும் அரசனின் ஐயத்தை போக்க முடியவில்லை.

தருமி என்ற பெயருடைய ஆதிசைவ மரபில் தோன்றிய ஏழை பிரம்ம சாரி இளைஞன் தன்திருமணச் செலவிற்காக அந்த பொற்கிழி தனக்கே கிடைக்க, அரசனின் ஐயம் நீக்குமாறுதனக்கும் ஓர் பாடல் இயற்றி தந்தருளுமாறு சோமசுந்தர கடவுளிடம் சென்று வேண்டினான்
.
உடனே ஐயன் கொங்கு தேன் என்று தொடங்கும் ஓர் பாடலை இயற்றிக் கொடுத்தார்.

அதனைப் பெற்றுக் கொண்டு தருமி சங்க மண்டபத்தில் உள்ள புலவர்களிடம் கொடுத்தான் புலவர்கள் அச்செய்யுளின் சொல்வளத்தையும், பொருள்வளத்தையும் கண்டு மகிழ்ந்து, அரசனிடம் அப்பாடலைக் கூறி பொருள் விளக்கினர்.

அரசன் தன் கருத்துக்கு அது முற்றும் ஒத்திருந்ததால் பொன் முடியை தருமிக்கு கொடுக்க இசைந்தான். அச்சமயம் நக்கீரன் என்னும் புலவன் இப்பாட்டில் பொருட் குற்றமிருப்பதாககூறினான்.

கைக்கெட்டியதுவாய்கெட்டாதுபோகதருமிவருந்தி, ஐயனிடம்குற்றமுள்ளபாடலைதனக்குதந்துஏமாற்றியதாககுற்றம்சுமத்தினான். ஐயனின் பாடலிலே புலவர் குற்றம் கண்டத்தால் இனி ஐயனை யார் மதிப்பார்கள் என்ற கூறி கண்ணீர் வடித்தான். உடனே

சோமசுந்தரர் புலவர் வடிவுக் கொண்டு சங்க மண்டபம் வந்து, புலவர்களை நோக்கி தன் பாடலில் குற்றம் கண்டவர் யார் என்று வினவினார். உடனே நக்கீரர் பாடலில் பொருட் குற்றம் கண்டது தானே என்றும், கூந்தலுக்கு சூடும் மலர்களினாலே மணம் வருகிறது கூந்தலுக்கு இயற்கையாக மணம் இல்லைஎன்றார்.

தேவமகளிர்களுக்குமா என்ற புலவரிடம், அவர்களின் கூந்தலுக்கும் பூக்களினால் உண்டான செயற்கை மணமேஎன்றார்நக்கீரன். இறுதியில் நக்கீரன் வணங்கும் காளத்தியப்பரின் தேவியான ஞானப்பூங்கோதையின் கூந்தலுக்குமா என்று கேட்டார். ஞானப் பூங்கோதையின் கூந்தலுக்கும் அவ்வாறே செயற்கை மணம் தான் என்றான் அதைக் கேட்டு கோபம் கொண்ட ஐயன் தனது நெற்றிக் கண்ணை சிறிதே திறந்துக் காட்ட, அது கண்டும் அஞ் சாத நக்கீரன்நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே என்று கூறினான்.

நெற்றிக் கண்ணின் வெப்பம் தாங்காது பொற்றாமரைப் பொய்கையில் வீழ்ந்தான் நக்கீரன். புலவராய் வந்தசோமசுந்தரர் திடீரென்று மறைந்தார்.

**பல்லவி**

அரசன் ஐயம் தனையும் அதனைத் தீர்ப்பதையும் சொல்வோர்க்
காயிரம் பொன்னைப் பரிசாய் அளிப்பதாகச் சொன்னான்

**அனுபல்லவி**

பரம பக்தன் தருமி பரிசைப் பெற்றிடவே உன்
பாதத்தில் வீழ்ந்திறைஞ்ச ஓர் பாடலைத் தந்தாய்

**சரணம்**

சக்தி ஞானப் பூங்கோதை கூந்தலும் இயற்கை மணம்
அற்றது எனச் சொல்லி பாடலில் பொருட் குற்றம் சொன்ன
நக்கீரனை நெற்றிக் கண்ணால் முறைத்து நோக்க கீரனும்
நெற்றிக் கண் திறந்தாலும் குற்றம் குற்றமென்று பொய்கையில்
வீழ்ந்தான்